இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 12-08-2024

# வக்ஃப் சட்டத்திலும் வன்மம்

பலிக்கும் வரை பாசிசத்தைப் புகுத்துவது பா.ஜ.க.வின் பாணி. அதில் ஒன்றுதான் வக்ஃப் வாரிய சட்டத்தைத் திருத்த முனைவது ஆகும். பலரும் எதிர்த்த நிலையில் நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு இதனை அனுப்ப ஒப்புக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

வக்ஃப் வாரியச் சட்டம் - 1995 என்ற பெயரை ஒருங்கிணைந்த வக்ஃப் மேலாண்மை, அதிகாரமளித்தல், திறன் மேம்பாடு சட்டம் - 1995 என்று பெயர் மாற்றம் செய்துள்ளார்கள்.

**வக்ஃப் வாரியம் எதற்காக உருவாக்கப்பட்டதோ, அதன் உண்மையான நோக்கம் என்னவோ அதற்கு விரோதமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர முனைகிறது பா.ஜ.க. அரசு. வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவின்படி வக்ஃப் வாரியத்தின் சொத்துகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் மாற்றப்படுகிறது.** வக்ஃப் வாரிய சட்டம் - 1995 இன் படி அமைந்துள்ள அதிகாரம் நீக்கப்படுகிறது. அந்தச் சட்டத்தின் 40 ஆவது பிரிவு நீக்கப்படுகிறது. மத்திய வக்ஃப் கவுன்சில் என்பதை உருவாக்குகிறார்கள். அதில் முஸ்லீம்கள் மட்டுமல்ல, முஸ்லீம் அல்லாதவர்களும் இருப்பார்களாம். எதற்கு இந்த வேண்டாத வேலையைச் செய்ய வேண்டும்?

தி.மு.க. நாடாளுமன்றக் குழுவின் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசும் போது, **"இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் வக்ஃப் வாரியத்தில் அங்கம் வகிக்க இந்த மசோதா அனுமதிக்கிறது. அதே போன்று ஒரு இந்துக் கோவிலை நிர்வகிக்க அனுமதிப்பீர்களா? அல்லது ஒரு சீக்கியம் அல்லது பார்ஸி மத விவகாரங்களில் இப்படி அனுமதிக்க முடியுமா? முடியாது"** என்று குறிப்பிட்டார். அதற்கு நேரடியான பதிலை ஒன்றிய சட்ட அமைச்சரால் சொல்ல முடியவில்லை.

வக்ஃப் வாரியத்தின் அதிகாரத்தை எதற்காக ஒரு கவுன்சில் வசம் கொடுக்க வேண்டும்? எது வக்ஃப் சொத்து என்பதை வரையறுக்கவே அந்த வாரியம் இருக்கிறது. அதிகாரப் பறிப்புக்கு பின்னால் இருக்கிற சதி என்ன? காலப் போக்கில் என்ன செய்யும் திட்டம் இருக்கிறது? சொத்து யாருடையது என்பதை முடிவெடுக்கும் அதிகாரம், மாவட்ட ஆட்சியர்களுக்கு ஏன் வழங்க வேண்டும்?

**லட்சக்கணக்கான ஏக்கர் நிலமும், லட்சம் கோடி பண மதிப்பும் கொண்டவை இந்தச் சொத்துகள். இதனை மாவட்ட ஆட்சியர்கள் கைக்குள் ஒப்படைக்கத் துடிக்கும் மர்மம் என்ன?**

வக்ஃப் வாரிய நிலங்களை கட்டாயமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டுமாம். வக்ஃப் நிலமா இல்லையா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் முடிவு செய்வார்களாம். சிறுபான்மைச் சமூகத்தினர் அவர்களின் சொத்துகளை நிர்வகிக்க அரசமைப்புச் சட்டம் பிரிவு 30 அதிகாரம் தருகிறது. அதனை மீறுவது அல்லவா இந்தப் பிரிவு? வக்ஃப் சொத்தா இல்லையா என்பதை ஆராய்வதற்குதான் வக்ஃப் வாரியம் இருக்கிறது. அந்த வேலையை மாவட்ட ஆட்சியர்களிடம் தரும் மர்மம் என்ன?

**வக்ஃப் வாரியச் சட்டத்தை மக்களவையில் தாக்கல் செய்து பேசினார் சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு. அறிமுக நிலையிலேயே 'இந்தியா' கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தார்கள். இது கூட்டாட்சி தத்துவத்துக்கும் அரசமைப்பு சட்டத்துக்கும் எதிரானது என்று சொல்லி எதிர்த்தார்கள்.** "வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதா எந்தவொரு மத அமைப்பின் சுதந்திரத்திலும் தலையீடு அல்லது குறுக்கீடு செய்யாது" என்று சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு சொன்னார். அவர் சொன்ன வார்த்தைக்கு அவருக்கே அர்த்தம் தெரியுமா எனத் தெரியவில்லை.

இந்தச் சட்டமே இசுலாமியர் சொத்து தொடர்பானதை கண்காணிக்கும் வக்ஃப் வாரியம் தொடர்புடையது. அதன் அதிகாரத்தை குறைப்பது என்பது இசுலாமியர்களின் மத சுதந்திரத்தில் தலையிடுவதுதானே? அந்த அமைப்புக்குள் இசுலாமியர் அல்லாதவர்களை நுழைப்பது என்பது அவர்களது மத உரிமையில் குறுக்கிடுவதுதானே?

**மதம் சார்ந்த நிலையை ஒரு அரசாங்கம் எதற்காக எடுக்க வேண்டும்? ஒரு மதத்தை ஒடுக்குவதற்காக ஒரு சட்டத்தை எதற்காகக் கொண்டு வர வேண்டும்? ஒரு குறிப்பிட்ட மதத்தின் சுதந்திரத்தில் எதற்காக தலையிட வேண்டும்? இது என்ன வகைப்பட்ட குணம்? "நீதி, சுதந்திரம், அதிகாரப் பகிர்வு ஆகிய தத்துவங்களை மீறும் வகையில் இந்த மசோதா அமைந்துள்ளது. முஸ்லீம்களின் எதிரி பா.ஜ.க. என்பதற்கு இந்த மசோதா ஒன்று போதும்"** என்று நாடாளுமன்றத்தில் மஜ்லீஸ் கட்சித் தலைவர் ஒவைசி சொல்லி இருக்கிறார்.

அரசியல் நோக்கங்களுக்காகத்தான் இது செய்யப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சிகள் அனைத்தும் சுட்டிக்காட்டி உள்ளது. அரியானா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் சட்டசபை தேர்தல் வரப் போகிறது. அதனால் தான் இதனைச் செய்கிறார்கள். பா.ஜ.க. இதுபோல் எத்தனையோ பம்மாத்துகளை கடந்த காலங்களில் காட்டி விட்டது. அது எதுவும் அந்தக் கட்சிக்கு பயனளிக்கவில்லை. இருந்த வாக்கு வங்கியையும் பா.ஜ.க. இழந்ததுதான் மிச்சம். ஆட்சி அமைப்பும் பெரும்பான்மையையும் பெறவில்லை. பல தொகுதிகளில் சதி செய்து தேர்தல் முடிவுகளையும் மாற்றி இருக்கிறார்கள். 'மதம்' என்ற இஞ்சின் ஓடவில்லை என்பது இன்னமும் பா.ஜ.க.வுக்கு புரியவில்லை.

**இந்தச் சட்டம் அரசியல் சாசனத்துக்கு எதிரானது. மத சுதந்திரத்துக்கு எதிரானது. வழிபாட்டு உரிமைக்கு எதிரானது. அனைவர்க்கும் இந்த நாடு சொந்தம் என்ற தத்துவத்துக்கு எதிரானது. வேற்றுமையில் ஒற்றுமைக்கு எதிரானது. எனவே இந்தச் சட்டத்தை முழுமையாக நிராகரிக்க வேண்டும்.**




சென்னை கம்பன் கழகம் சார்பில் தியாகராயர் நகர் வாணி மஹாலில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் கம்பன் கழகத் தலைவர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்புரையாற்றினார். நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பொன்விழா தொடக்க உரையாற்றினார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி இரா.சுரேஷ்குமார் தலைமையேற்று விருதுகள் வழங்கினார். உடன் விருதாளர்கள் உள்ளனர்.

# 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் இந்தியாவிலேயே முன்னோடி திட்டம்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை. ஆக. 12-
தமிழக கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் "தமிழ்ப்புதல்வன்" திட்டத்தினை கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு, மாணவர்களுக்கான தமிழ்ப்புதல்வன்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஏராளமான கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழ்ப்புதல்வன் திட்டம் இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாகவும், வழிகாட்டும் திட்டமாகவும் இதை தமிழக முதல்வர் கொண்டு வந்துள்ளார்.

தமிழகத்தில் அரசு பள்ளியில் தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாகவும், அதில் படிக்கும் மாணவர்கள் இடை நிற்றலை தவிர்த்தும் அவர்கள் உயர் படிப்பிற்கு சென்று, அவர்கள் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளாக உயர் பொறுப்பிற்கு சென்று, நமது தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், தமிழ்ப்புதல்வன் என்னும் உன்னத திட்டத்தை தமிழக முதல்வர் தொடங்கி வைத்துள்ளார்.

வஃப்பு வாரிய திருத்தச் சட்டம், நிலை குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது திரும்ப வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று செய்தியாளர்களிடம் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

## ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில்

# ரூ.96 லட்சத்தில் நவீன வசதிகளுடன் புதிய கட்டிடம்!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி – மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து ஆய்வு மேற்கொண்டனர்!

ஈரோடு, ஆக. 12 -
ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் நேற்று (11-08-2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை, பல்நோக்கு உயர் சிகிச்சை பிரிவில் ரூ.96.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன வசதிகளுடன் சிகிச்சை பெற கட்டணப் படுக்கைகள் கொண்ட அறைகளை திறந்து வைத்து ஆய்வு கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல் படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு ரூ.8.5 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்க கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதனை விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் டிஜிட்டல் எக்ஸ்ரே சி.டி. ஸ்கேன் வசதி ஏற்கனவே உள்ளது. பொதுமக்கள் தனியார் மருத்துவமனைகளை விட அரசு மருத்துவமனைகளையே அதிகம் நாடுகின்றனர். கடந்த 3 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைக்கு வருவோரின் எண்ணிக்கை 2 மடங்காக அதிகரித்துள்ளது. மேலும் இன்றைய தினம் (11-08-2024) அரசு மருத்துவமனையின் சேவையினை மேம்படுத்திடும் வகையில் 20 கட்டண படுக்கை அறைகள் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னையை தொடர்ந்து கோவை, மதுரைகளில் திறக்கப்பட்டு ள்ளது.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கட்டண படுக்கைள் 16 இடங்களில் திறக்க அறிவிக்கப்ப ட்டது. மற்ற இடங்களிலும் விரைவில் இச்சேவையினை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மிக குறைந்த கட்டணத்தில் குளிர்சாதன வசதிகளுடன் அறை அமைந்துள்ளது. அதிகம் தொழிற்சாலை கழிவுகளால் பாதிக்கப்பட்ட ஈரோடு, கன்னியாகுமரி, ராணிப்பேட்டை திருப்பத்தூர் ஆகிய 4 மாவட்டங்களில் புற்று நோய் கண்டறியும் பரிசோதனை கடந்த ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்டது. இதில் மொத்தமாக 9,82,334 அழைப்பாணை அனுப்பப்பட்டு 4,19,143 பேர் வந்து பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். இதில் பேருக்கு புற்று நோய் சந்தேகம் இருந்த போதிலும், 176 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. பாதிப்பு கண்டறியப்பட்டவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஈரோடு மாவட்டத்தில் 3,29,473 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு 1,27,011 பேருக்கு பரிசோதனை நடத்தப்பட்டது. 3,039 சந்தேகம் இருந்த நிலையில் 50 பேருக்கு மட்டுமே புற்று நோய் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்களிலும் புற்று நோய் பாதிப்பு குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் 1,021 மருத்துவர் பணியிடங்கள் வெளிப்படை தன்மையுடன் நிரப்பப்பட்டது. மேலும், 977 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 986 மருந்தாளுனர் நியமிக்கப்பட உள்ளனர். காலி பணியிடங்களை வெளிப்படையாக அறிவித்து அவர்களின் விருப்பத்தின் பேரில் பணியிடம் ஒதுக்கப்படுகிறது. மேலும், மருத்துவர் நியமனத்திற்காக 2,053 விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. தேர்வு நடைபெற உள்ளது. முடிவு வெளியானதும் ஆன்லைனில் வெளியிடப்பட்டு மருத்துவர்கள் நியமிக்கப்ப டுவர். 1,066 சுகாதார ஆய்வாளர்கள் நியமன வழக்கு மதுரை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 2,250 கிராம சுகாதார செவிலியர் பணியிடம் நிரப்புவதற்கா ன வழக்கு உச்சநீதி மன்றத்தில் உள்ளது. வழக்குகள் முடிந்ததும் அந்த பணியிடங்களும் நிரப்பப்படும். குழந்தைகள் பிரிவுகளில் குழந்தைகள் பாதுகாப்பிற்கென உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

மேலும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை, பல்நோக்கு உயர் சிகிச்சை பிரிவில் கட்டிடப்பணிகளுக்காக ரூ.60.00 இலட்சம் மற்றும் தளவாடங்களுக்காக ரூ.36.00 இலட்சம் என மொத்தம் ரூ.96.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன வசதிகளுடன் சிகிச்சை பெற 20 கட்டணப் படுக்கைகள் கொண்ட அறைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர். ப. செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் .ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், துணை மேயர் வே. செல்வராஜ், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.அம்பிகா சண்முகம், துணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.சோமசுந்தரம் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அரசு ஊழியர் ஓய்வு வயதை

# 62ஆக உயர்த்தப் போவதாகப் பரவும் வதந்தி!

## வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம்! அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக. 12-
அரசு ஊழியர் ஓய்வு வயது 60லிருந்து 62 ஆக மாற்றியமைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாகவும், இன்னும் 15 தினத்துக்குள் இது குறித்து அரசாணை வெளியிட வாய்ப்பு உள்ளதாகவும் சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவின.

இந்நிலையில் தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்புக் குழு வெளியிட்டுள்ள அறிவிப்பில், அரசு ஊழியர் ஓய்வு வயதை 62 ஆக உயர்த்தப் போவதாக பரவும் செய்திகள் வெறும் வதந்தி என்றும், அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 62 ஆக மாற்ற எந்த தீர்மானமும் நிறை வேற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்ட அமலாக்கத்துறையின் கீழ் உண்மை சரிபார்ப்புக் குழு செயல்பட்டு வருகிறது.

இந்தக் குழு, அனைத்து ஊடக தளங்களிலும் தமிழ்நாடு அரசு, அமைச்சகங்கள் மற்றும் துறைகள் தொடர்பாக வெளிவரக்கூடிய தவறான மற்றும் போலிச் செய்திகளை கண்டறிந்து, பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் பணியை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பில் காஞ்சிபுரம் கே.பி.கே. ரத்னா பாய் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விவசாயிகள் திருவிழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாய பொருட்காட்சியை திறந்து வைத்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். உடன் காஞ்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, ஒன்றியக் குழுத் தலைவர் மலர்கொடி மற்றும் பலர் உடன் இருந்தனர்.